முறையில் இங்கே கிளப்புகிறீர்கள். இப்போது நடந்துவரும் நிகழ்ச்சிகளில் ஏதேனும் விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டு இருக்குமானால் பேசலாம். அந்தப் பிரச்னை குறித்து நாளைக்குப் பேசலாம். நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

(4) கவன ஈர்ப்பு

தமிழக அனல் மின்நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியைக் கொண்டுவர தாம் ஏற்பாடு செய்ததாக திரு. மோகன் குமாரமங்கலம் கூறியதான செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சட்டப்பேரவை 41-வது விதியின் கீழ் அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்னையை திரு. நா. வீராசாமி அவர்கள் தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, தமிழக அனல் மின்சார நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரி பற்றுக்குறை பற்றி சில நாட்களுக்கு முன் தான் மத்திய அரசுக்கு மாநில அரசு தகவல் தந்தது என்றும், அத்தகவலைக் கூட செய்தித் தாள் படித்துப் பார்த்தபின்தான் தெரிந்து கொண்டு தமிழ் நாட்டுக்கு நிலக்கரி கொண்டு வர ஏற்பாடு செய்தேன் என்றும் மத்திய அமைச்சர் திரு. மோகன் குமாரமங்கலம் அவர்கள் வடாற்காடு மாவட்டத்தில் வேலூரில் பேசியது பற்றிய அவசரப் பொதுமுக்கியமான பிரச்னையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மத்திய உருக்குத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. மோகன் குமாரமங்கலம் அவர்கள் பேசியதாகச் சில செய்திகள் வெளிவந்துள்ளன. தமிழக அரசுக்குத் தேவையான நிலக்கரி பற்றி சில நாட்களுக்கு முன்னர்தான் மத்திய அரசுக்கு மாநில அரசு தகவல் தந்தது. செய்தித்தாளை படித்துத்தான் தமிழ் நாட்டில் நிலக்கரி பற்றுக்குறை இருப்பதைத் தெரிந்து கொண்டேன், அதன் பிறகு தான் கப்பலில் நிலக்கரி கொண்டு வர ஏற்பாடு செய்தேன் என்று பேசியுள்ளார். இது பற்றிய தகவல்களை மன்றத்திற்கு விளக்க விரும்புகிறேன்.

1972-ம் ஆண்டு மே மாதம் 26-ம் தேதி தமிழக மின் வாரியத் தலைவர், மத்திய நீர்-மின் கழகத்தின் உதவித் தலைவருக்கும், மத்திய கனிவள அமைச்சகத்தின் ஆலோசகருக்கும் கடிதம் எழுதினர். அந்தக் கடிதத்தில் சிங்கரேனியிலிருந்து நிலக்கரி வேகமாக தமிழகத்திற்கு வந்து சேருவதற்கும் அதற்கேற்ற அளவுக்கு ரெயில்வே வாகன்கள் ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்பதை வலியுறுத்திக்

கூறப்பட்டிருக்கிறது. மேலும் வங்காளம், பீகார் சுரங்கங்களிலிருந்து நிலக்கரி கொண்டு வருவதற்கு கப்பல்களை ஏற்பாடு செய்து தரும்படி இந்தக் கடிதத்தில் மத்திய அரசாங்கம் வற்புறுத்தப்பட்டுள்ளது. 30—5—1972-ம் நாள் டெல்லியில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழக மின் வாரியத் தலைவர் மத்திய கனிவள அமைச்சகத்துக்கும், ரயில்வே அமைச்சகத்துக்கும், நீர்ப் பாசன மின்துறை அமைச்சகத்துக்கும் சிங்கரேணி சுரங்கத்திலிருந்து நிலக்கரி தமிழ்நாட்டிற்கு வருவதில் உள்ள கால தாமதத்தைப் பற்றி எடுத்து விளக்கினர். நமது வேண்டுகோளை ஏற்று மத்திய நீர்மின் கழகத்தின் துணைத் தலைவர் மத்தியக் கனிவள அமைச்சகத்தில் செயலாளருக்கு 3—6—1972-ல் ஒரு கடிதம் எழுதினர். அந்தக் கடிதத்தில் தமிழகத்திற்குத் தேவையான நிலக்கரியை சிங்கரேணி சுரங்கத்திலிருந்து அனுப்புவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. இதைப் பரிசிலித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அந்தக் கடிதத்தில் நிலக்கரி பற்றுக்குறையால் எண்ணூர் அனல் மின் நிலையத்திற்குச் சங்கடம் ஏற்படும் என்றும், உடனடியாக நிலக்கரி அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் வற்புறுத்தப்பட்டுள்ளது.

1972-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ந் தேதி அன்று டில்லியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் மத்திய கனிவளத் துறை, நீர் மின் துறை, ரயில்வே வாரியம் ஆகியவை கலந்து கொண்டன. அந்தக் கூட்டத்திலும் நமது மின் வாரியத் தலைவர் அவர்கள் நமது மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலக்கரி வந்து சேருவதில் கால தாமதம் ஏற்பட்டு நிலக்கரி இருப்பு குறைந்து வருவதைச் சுட்டிக் காட்டினர்.

மறுபடியும் மின் வாரியத் தலைவர் அவர்கள் 7—10—1972 அன்று மத்திய நீர் மின் துறை செயலாளருக்கு சிங்கரேணியிலிருந்து நிலக்கரி போதுமான அளவுக்கு வரவில்லை, ஆகவே மத்தியப் பிரதேச சுரங்கங்களிலிருந்தாவது உடனடியாக நிலக்கரி அனுப்ப ஏற்பாடு செய்யவேண்டும் என்று எழுதினர். இதே கருத்தை 11—10—1972-ம் தேதி மறுபடியும் வற்புறுத்தி எழுதப் பட்டது. மேலும் இந்தக் கருத்தை வலியுறுத்தி கனிவள இயக்குநருக்கு 12—10—1972-ம் தேதி ஒரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மறுபடியும் 18—1—1973-ம் தேதி மத்திய அரசின் கனிவளத் துறையின் கூட்டுக் காரியதரிசிக்கும் நமது அனல் மின்சார நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியை உடனடியாக அனுப்ப ஏற்பாடு செய்யும்படி எழுதப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் உடனடியாக ஒரு இலட்சம் டன் நிலக்கரி கப்பல் மூலமாக வங்காளம், பீகாரிலிருந்து அனுப்ப வேண்டும் என்று வற்புறுத்தப் பட்டுள்ளது. 10—2—1973-ம் தேதி திரு. மோகன் குமாரமங்கலம் அவர் களுக்கு நிலக்கரி பற்றாக்குறையை எடுத்துக் கூறி நிலக்கரியை அனுப்ப ஏற்பாடு செய்யும்படி நான் ஒரு செய்தி அனுப்பினேன். இத்தனை முயற்சி களும் தொடர்ந்து மாநில அரசும், மின் வாரியமும் எடுத்து வந்திருப்பதை இந்த மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ஆனால் இந்தத் துறையில் பொறுப்பேற்று இருக்கக் கூடிய திரு. மோகன் குமாரமங்கலம் மத்திய அரசுத் துறைகளில், அதுவும் அவருடைய இலாகாவி லேயே நடைபெற்றிருக்கும் நிகழ்ச்சிகளைப் பற்றி தெரிந்து கொள்ளாமல் மாநில அரசு எந்த முயற்சியும் எடுக்காதது போல் குறை கூறியிருப்பது விசித்திரமாக இருக்கிறது. இவ்வாறு தவறான கருத்துக்களை வெளியிட்டு அரசியல் நோக்கத்தோடு மத்திய அரசில் உள்ள பொறுப்புள்ள அமைச்சர் ஒருவர் மக்களை அரசியல் லாபத்திற்காக திசை திருப்ப முயற்சிப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். இத்தகைய உண்மைக்குப் புறம்பான பேச்சுக்கள் மத்திய மாநில உறவுகளைப் பாதிக்கும் என்பதை இதன் மூலம் இந்தியத் தலைமை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவது என் கடமை யாகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காக நான் வருந்து கின்றேன்.

(5) அமைச்சரின் அறிக்கை.

பட்டதாரி ஆசிரியர்களின் கிளர்ச்சி குறித்து கல்வி அமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்பொழுது மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் சட்டப்பேரவை 82-வது விதியின் கீழ் ஓர் அறிக்கையை சமர்ப்பிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பட்டதாரி ஆசிரியர்களில் ஒரு பிரிவினர் தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்தி நேரடிக் கிளர்ச்சியில் ஈடு படப் போவதாகப் பத்திரிகைகளில் அறிவிப்பு வெளியிட்டுள்ளது கண்டு நான் மிகவும் வேதனையடைந்துள்ளேன். மார்ச் மாதம் 5 ஆம் தேதியன்று சென்னையில் தலைமைச் செயலகத்தின் முன்பு மறியல் செய்யப் போவதாகவும், மார்ச் 12-ம் தேதியன்று மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்களின் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாகவும், எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் கண்காணிப்பு வேலையையும், விடைத் தாள்களைத் திருத்தும் வேலையையும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்றும் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.